வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு. A. கந்தகுமார்., எம்.எல்.,

மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ), மயிலாடுதுறை,

அமர்வு வழக்கு எண் 52/2023

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 5 | நாள் | 18.07.2023 |
| பெயர் | சுகுமாறன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் பெரம்பூர் காவல் நிலையத்தில் தலைமை காவல் அதிகாரியாக இருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். நான் 2003 ல் நான் செம்பனார் கோயில் காவல் நிலையத்தில் காவலராக இருந்தபோது காவல் நிலையத்தில் 13.03.2003 காலை 8 மணிக்கு பாதுகாப்பு பணிக்கு மயிலாடுதுறை காவல் நிலையத்திற்கு சென்றேன். அன்று 15 மணிக்கு மயிலாடுதுறை மேம்பாலத்தில் பாதுகாப்பு பணிக்கு ஆஜரானேன். என்னோடு காவலர்கள் 1160,1313,398 மற்றும் காவலர்கள் பாதுகாப்பு பணியில் இருந்தனர். 19 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டு விடுதலை சிறுத்தை கட்சி புறப்பட்டு வந்தது. மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் திரு. மோகனவேல், பாலையூர் காவல் ஆய்வாளர் திரு.அமிர்குமார் மற்றும் மயிலாடுதுறை காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமார் நாகராஜன் உடன் இருந்தனர். ஊர்வலம புறப்பட்டு வரும்போது திருமாவளவன் வாழ்க வருது வருது சிறுத்தை வருது எப்படி வருது சீறீ வருது என்கு கோஷம் போட்டு கொண்டு 19.30 மணிக்கு செம்மங்குளம் அருகில் வரும் போது ஊர்வலத்தினர் 2 ரோட்டில் செல்ல முயன்றனர். 1 ரோட்டிற்கு செல்லதான் அனுமதிபெற்றது என்றபோது ஆய்வாளர்கள் இருவரும் வந்து 1 ரோட்டில் செல்லக்-கூடாது என்று கூறியும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது காவல் துறையினரை இழிவாக பேசியும் போலிஸ் நாய்களை அடிங்கடா என்றும் இதை கேள்விப்பட்டு திருமாவளவன் ஊர்வலத்தின் முன் வந்து அடிங்கடா என்று கூறியும் அப்போது ஊர்வலத்தின் முன் பக்கம் இருந்தவர்கள் கற்கலாலும், கட்டையாலும்

யார்யார் தலையில் அடித்தார்கள் என்றும் யார்மீது பட்டது என்றும் தெரியவில்லை. நான் ஊர்வலத்தின் முன் பகுதியில் இருந்ததால் ஆய்வாளர் திரு. அமிர்தகுமார் மற்றும் காவலர்கள் 1160,398,1313 மற்றும் பல காவலர்களுக்கு காயம் ஏற்பட்டது. எனக்கு தலையின் வலது பக்கம் காயம் ஏற்பட்டது. ஊர்வலததில் வந்ததவர்கள் என்னை கல்லால் அடித்தார்கள் அந்த ஊர்வலத்தில் ஆஜர் எதிரிகளும் இருந்தார்கள். மயிலாடுதுறை ஆய்வாளர் என்னையும் மற்ற காவலர்களையும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று மயிலாடுதுறை காவல் நிலையத்திற்கு வந்தேன். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் கருங்கல் தான் என்னை தாக்கிய கல் சா.பொ.2 ஆகும்.

எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரிகள் அனைவரும் ஊர்வலத்தில் இருந்தார்கள் என்ற விவரத்தினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் பலபேர் இருந்தார்கள் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் கருங்கல்லை நான் விசாரணையின் போது அடையாளம் காண்பித்து இந்த கல்லால் தான் தாக்கப்பட்டேன் எந்த வாக்குமூலமும் தரவில்லை. சா.பொ2 ல் தான் நான் தாக்கப்பட்டேன் என்று என்னால் உறுதியாக கூற இயலவில்லை என்றால் சரிதான். தற்போது போலிசார கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆஜர் எதிரிகள் அனைவரும் ஊர்வலத்தில் இருந்தார்கள் என்றும் சா.பொ.2 ல் தாக்கப்பட்டேன என்றும் முதல் முறையாக முன்னிறுந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் செம்பனார்கோயில் காவல் நிலையத்தில் நான் ஊர்வலத்திற்கு வந்ததற்கான பொது நாள் குறிப்பு ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது. காவல் துறை கையேட்டில் குறிப்பில் பணி தொடர்பான குறிப்புகள் உள்ளது. காவல் துறை பொதுநாட்குறிப்பு, கையேட்டு குறிப்புகளை பார்வையிட்டு என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மோகனவேல், அமிர்குமார் ஆகியோர் முதல் விசாரணையில் சொன்ன பிற காவலர்களும் என்னுடன் ஊர்வல பணியில் இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1 3.03.2003 நான் ஊர்வல பணி பாதுகாப்பில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 19 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டது என்றும், 19.30 மணிகவு பிரச்சனை ஏற்பட்டது என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. திருமாவளவன் கூட்டத்திற்கு முன்னால் வந்து கூட்டத்தினை தூண்டி விட்டது போல் கூறிய வார்த்தைகள் எதுவும் கூற வில்லை

என்றால் சரியல்ல. எனது தலையின் வலது பக்கத்தில் காவல் உயர் அதிகாரிகள் கேட்டுகொண்டதற்கு இணங்க சிறிய அளவில் ஒரு காயத்ததை ஏற்படுத்திகொண்டு அதன் அடிப்படையில் மருத்துவமனையில் அனுமதிபெற்று ஊர்வல பணியின் போது காயம் ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.